தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

முதலாம் ஆண்டு – முதற்பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2016**

**C012** இடைக்கால இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. மனிதப்பிறவியின் உயர்ந்த நோக்கம் யாது?
2. இனிய இல்லறத்திற்கு அடிப்படையாக அமையும் நற்குணங்கள் யாவை?
3. கல்வியை எப்போது கற்கவேண்டும்?
4. இனியன என்று மொத்தம் எத்தனை கருத்துகள் இனியவை நாற்பதில் சொல்லப்படுகினறன?
5. ஆசாரக்கோவை என்பதன் பொருள் யாது?
6. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் யார்?
7. கூற்றம் என்பதன் பொருள் யாது?
8. நோய்கள் யாரிடம் சுலபமாகச் சேரும்?
9. மூதுரை நூல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
10. ‘முள்ளினால் முள் களையுமாறு’ என்ற பழமொழி விளக்கும் பொருள் யாது?
11. சான்றோரைக் குமரகுருபரர் எதனுடன் உவமித்துள்ளார்?
12. நன்னெறி எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
13. மன்மதனின் வாகனமாக கருதப்படுவது எது?
14. முக்கூடற்பள்ளு சிறப்பித்துக் கூறும் கடவுள் பெயர் என்ன?
15. தமிழில் முதல் சதக நூல் எது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. அறம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. எப்படிப்பட்ட மூவரை நண்பர்களாகப் பெறவேண்டும் என்று திரிகடுகம் குறிப்பிடுகிறது?
3. சிறுபஞ்சமூலம் கூறும் ஐந்து வேர்கள் யாவை?
4. ஏலாதி – குறிப்பு வரைக.
5. மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவர் என்று உலகநீதி யாரைக் குறிப்பிடுகிறது?
6. நட்பில் பிரிவு கூடாது என்பதற்கு நன்னெறி கூறியுள்ள உவமையை விளக்குக.
7. கழங்கு என்றால் என்ன?
8. உலா இலக்கியத்தில் இடம்பெறும் எழுவகைப் பருவ மகளிர் பெயர்களைக் குறிப்பிடுக?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) நிலையாமைக் குறித்து நாலடியார் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நம் வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் பிறரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய நெறிகளாக ஆசாரக்கோவை கூறுவன யாவை?

2. (அ) நந்திக்கலம்பகத்தின் உறுப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பரணி இலக்கியம் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

3. (அ) பழமொழி நானூறு கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அபிராமி அந்தாதியில் அன்னை அபிராமியின் திரு உருவ வருணனைகள் குறித்து எழுதுக.

***